# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## விலைக்கோரல் இல. ITM/2/1/02/03/2025/NCB/02

1. விலைமனு ஆவணங்களின் அட்டவணை தேவைப்பாட்டில் (பிரிவு ஏ) குறித்துரைக்கப்பட்டுள்ள நிதி அமைச்சிற்குப் பொருத்தமான அலுவலக உற்பத்தித்திறன் சகிதம் மின்னஞ்சல் தீர்வை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் இப்போது கோரப்படுகின்றன.

   விநியோகம் மற்றும் அமுல்படுத்தல் காலம்: கையளிக்கப்படும் காலம் முதல் 02 மாதங்களுக்குள்

2. தேசிய பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தகுதி வாய்ந்த சகல விலைமனுதாரர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

3. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் 0112-484582 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கொழும்பு-01, செயலகம், நிதி அமைச்சு, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம், பணிப்பாளர் (நிதி) திரு. D.P.G. பிரதீப் அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2025 ஆகஸ்ட் 04ஆம் திகதி முதல் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப 3.30 மணி வரை வரையில் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. தகைமைகள்

   - விலைமனுதாரர்கள் இலங்கையில் விலைக்கோரல் வர்த்தக நாமத்தில் பொருத்தமான அலுவலக உற்பத்தித்திறன் சகிதம் மின்னஞ்சல் தீர்வை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் கடந்த ஐந்து வருட காலங்களில் (2020, 2021, 2022, 2023, 2024) குறைந்தபட்சம் 500 செயன்நிலை பயன்பாட்டாளர் கணக்குகள் சகிதம் அரசாங்கத் துறையில் (கல்வி நிறுவனங்கள் தவிர) குறைந்தபட்சம் மூன்று திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று நிதியாண்டுகளுக்குள் (2021-2022, 2022-2023, 2023-2024) நிறைவு செய்த அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்கான மொத்த சான்றுபடுத்திய கொடுப்பனவாக கணக்கிடப்பட்ட குறைந்தபட்ச சராசரி வருடாந்த புரள்வாக 100 மில்லியன் இலங்கை ரூபாவைப் பெற்றிருக்க வேண்டும்,
   - விலைமனுதாரர்கள், இலங்கை ரூபாய் இருபது மில்லியன் (இலங்கை ரூபாய் 20 மில்லியன்) அல்லது அதற்கு சமமான ரொக்கக் காசுப் பாய்ச்சல் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான எந்தவொரு ஒப்பந்த முற்பணத்தையும் தவிர, திரவ சொத்துக்கள், சுமையற்ற உண்மையான சொத்துக்கள், கடன் வரி மற்றும் பிற நிதி வழிமுறைகள் போன்ற நிதி ஆதாரங்களை அணுகுவதை அல்லது கிடைப்பதை நிரூபிக்க வேண்டும், மேலும் இந்த திட்டத்திற்கான விலைமனுதாரரின் ஏனைய கடப்பாடுகளின் நிகரத்தையும் நிரூபிக்க வேண்டும்.
   - விலைமனுதாரர்கள் ஒத்துழைப்பு மற்றும் நிறுவுவதற்காக கல்வி மற்றும் தொழிநுட்ப தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 20,000.00 ரூபா (20,000.00 இல. ரூபா) தொகையைச் செலுத்தி மற்றும் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

4. விலைமனுக்கள் 2025 ஆகஸ்ட் 25ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்க வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2025 ஆகஸ்ட் 25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பின்வரும் முகவரியில் சமூகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் அல்லது நிகழ்நிலையில் (on-line) விலைமனுக்கள் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் 1,200,000.00 ரூபா (1,200,000 இல. ரூபா) விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

7. 2025 ஆகஸ்ட் 13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிதி அமைச்சு, தரைத் தளம், ரன்தொர கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் வளமுள்ள விலைமனுதாரர்கள் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்,**
**நிதி அமைச்சு, அறை இல. 27,**
**செயலகம், கொழும்பு 01.**
**2025 ஜுலை 30.**